தினத்தந்தி 12/5/2022

வடவள்ளி, மே.12-

கோவையில் பிரசித்தி பெற்ற மருதமலை சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் உள்ளது. இந்த கோவிலில் பக்தர்கள் செலுத்திய காணிக்கைகள் நேற்று எண்ணப்பட்டது. இதில் பொது உண்டியல்கள் மூலம் ரூ.38 லட்சத்து 42 ஆயிரத்து 792-ம், திருப்பணி உண்டியல் மூலம் ரூ.99 ஆயிரத்து 335-ம், கோசாலை உண்டியல் மூலம் ரூ.5 லட்சத்து 54 ஆயிரத்து 225-ம் வசூலானது. மொத்தம் உண்டியல் காணிக்கை மூலம் ரூ.44 லட்சத்து 96 ஆயிரத்து 352 கிடைத்தது. இதுதவிர தங்கம் 34 கிராம் 900 மில்லி கிராமும், வெள்ளி 1 கிலோ 690 கிராமும் இருந்தது. உண்டியல் எண்ணும் பணியில் திருக்கோவில் துணை ஆணையர் ஹர்சினி பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோவில் உதவி ஆணையர் விமலா மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் சேவற்கொடியோன் சேவை குழுவினர் மருதமலை தேவஸ்தான மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் ஈடுபட்டனர்.



கலெக்டர் சமீரன், அதிக மதிப்பெண் பெற்ற ஒரு மாணவிக்கு பரிசு வழங்கிய போது எடுத்த படம்.

**அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை சார்பில்**

# நன்றி நவிலும் விழா

கோவை, மே.12-

அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்கள் சார்பில் அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தில் நன்றி நவிலும் விழா நடைபெற்றது. பல்கலைக்கழக பதிவாளர் கவுசல்யா வரவேற்றார். விழாவில் துணை வேந்தர் பாரதி ஹரிசங்கர் பேசுகையில், பல்கலைக்கழகத்தில் 8,154 மாணவிகளும், 395 ஆசிரியர்கள், 254 ஆசிரியரல்லாத பணியாளர்கள், 36 துறைகளை கொண்டு இயங்கி வருகிறது. மேலும் 14 புரிந்துணர்வு ஒப்பந்தம், 13 முதன்மை ஆய்வு திட்டம், 40 ஆய்வு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 315 ஆய்வு கட்டுரைகள் வெளியிட்டும், 37 விருதுகள் பெறப்பட்டு உள்ளது என்று கூறினார். தொடர்ந்து அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை இணை நிர்வாக அறங்காவலர் கவுரி ராமகிருஷ்ணன் பேசும்போது, போட்டிகள் நிறைந்த இந்த உலகில் மாணவிகள் வெற்றிக்கான முயற்சிகள் எடுக்க வேண்டும் என்றார்.

விழாவில் கலெக்டர் சமீரன் கலந்து கொண்டு பேசுகையில், கல்வி என்பது ஒரு ஆயுதம். பெண்கள் அதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவிகளுக்கும், மாணவிகளின் தலைவிகளுக்கும் பாராட்டுகள் என்று பேசினார். தொடர்ந்து விழாவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு கலெக்டர் சமீரன் பரிசுகள் வழங்கினார். முடிவில் பல்கலைக்கழக மாணவியர் பல முதன்மையர் உமாமகேஷ்வரி நன்றி கூறினார். இந்த விழாவில் இறுதியாண்டு மாணவிகள், புதிதாக தேர்வு செய்யப்பட்ட மாணவிகளின் தலைவிகளிடம் பொறுப்புகளை ஒப்படைத்தனர்.